**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** ஆண்டுக்கு ஒரு முறை நடத்துகிற தேர்வை மட்டும் வைத்து மாணவர்களுடைய திறமையைக் கணக்கிட முடியாது என்பதைக் கொள்கை அளவில் அரசாங்கம் ஒத்துக்கொண்டிருக்கிறது. பொதுத் தேர்வுக்கு எப்படி மதிப்பிடுவது, நடத்தை போன்ற வற்றிற்கு எப்படி மதிப்பிடுவது என்பதையெல்லாம் கல்வி நிபுணர்கள் விருப்பத்திற்கு விட்டு, அதை ஏற்றுக் கொள்வது நல்லது என்று அரசாங்கம் கருதுகிறது.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தேர்வு பெறும் மாணவர்கள் மொத்தத் தொகை குறைவாக இருப்பதால், குறைந்த பட்சம் 60 சத விகிதம் தேர்வு அளிக்கப்படுவதற்கு அரசாங்கம் வகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** தேர்வு இல்லாமலே அனுப்பலாமா என்று அங்கத்தினர் யோசனை கூறுகிறாரா என்று தெரியவில்லை. தேர்வு என்றால் திறமையையும் கவனிக்க வேண்டும். இத்தனை சத விகிதம் தேர்வு வேண்டுமென்று கவனித்தால், அது கல்வித் தரத்தைக் குறைப்பதாகும்.

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** இப்போது இத்தனை சதம் மாணவர்கள் வெற்றி பெற வேண்டுமென்ற நியதி இருந்துவருகிறதா ? அப்படியிருந்தால் அதை ரத்து செய்ய அரசு உத்திரவு பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** எதிர்காலத்தில் செய்வார்களா என்று கேட்டதால், இல்லை என்று சொன்னேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** கால் ஆண்டு, அரை ஆண்டு தேர்வு மதிப்பெண்களை மட்டும் பார்க்காமல், மாணவர்கள் நன்னடத்தையைக் குறித்து, ஆசிரியர்களின் மார்க்குகளையும் வைத்து, ஏதாவது ஒரு முறை வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** இப்போது பல்கலைக் கழகம் அதைப் பற்றிப் பரிசீலித்து வருகிறது. ஒரு தேர்வை மட்டும் எடுத்துக் கொள்வதா, ஆண்டுதோறும் அவர்கள் காட்டக்கூடிய திறமையையும் அடிப்படையாக வைத்து, தேர்வு முறை வைத்துக்கொள்வதா, என்ற பிரச்னை இருக்கிறது. அதில் ஒழுக்கமும் சேருமா என்று தெரியவில்லை. பல்கலைக் கழகம் ஒப்புக்கொண்டால் அதை ஏற்றுக்கொள்ளலாம்.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் :** எங்கள் ஊரிலுள்ள கல்லூரியில் இருக்கிற பிள்ளைகள் ஊருக்குப் போய்விட்டார்கள். தேர்வுக்கு வரும் சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரியவில்லை. பொதுத் தேர்வு நடக்காமல் இருந்தால், அடுத்த வருஷம் அந்த மாணவர்கள் நிலை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். மாவதன் :** விருதுநகரில் கல்லூரியை மூடி விட்டார்கள் என்று கனம் அங்கத்தினர் கூறுகிறார்கள். அதன் விவரம் என்னிடத்தில் இல்லை.

### *Kadamba Tank*

* 213. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any scheme to lower the level of the Kadamba Tank sluice in Tiruchendur Taluk of Tirunelveli district by 17-1/2 feet ;

(b) whether the agriculturists contend that they will be affected thereby; and

(c) whether there is any litigation for over 30 years in this connection?

**கடம்பாகுளம் மதகு.**

**திரு. என். ஆர். தியாகராஜன் :** மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) திருநெல்வேலி மாவட்ட திருச்செந்தூர் தாலுக்கா கடம்பாகுளம் மதகை ஒண்ணரை அடி தாழ்த்திக் கட்டத் திட்டம் இருக்கிறதா ?

(இ) இது தங்களைப் பாதிக்கும் என விவசாயிகள் கூறுகிறார்களா ?

(உ) இது சம்பந்தமாக 30 வருடமாக வழக்கு நடைபெற்று இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா :** (அ) இத்திட்டம் ஐந்து ஆண்டுகளுக்குத் தள்ளிப் போடப்பட்டுள்ளது.

(இ) இத்திட்டம் தங்கள் பாசன உரிமையைப் பாதிக்குமென கடம்பா ஆயக்கட்டுக்காரர்கள் கருதுகிறார்கள்.

(உ) 18–3–1965 நாளிட்ட ஒரு வழக்கு அறிவிப்பு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுக்கப்பட்டு, அது பதிவு செய்யப்பட்டுள்ளது. வழக்கு எதுவும் நடைபெறவில்லை. ஆனால், இது சம்பந்தமாக கடம்பா ஆயக்கட்டு தாரர்களுக்கும் கீழுள்ள ஆயக்கட்டுக்காரர்களுக்கும் நீண்டகாலமாக விவாதங்கள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது.

*Ex-servicemen.*

* 214. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the assistance given by the Government of Tamil Nadu for the ex-servicemen; and

(*b*) whether there is any special assistance fund for them?

**முன்னாள் போர் வீரர்கள்.**

**திரு. என். ஆர். தியாகராஜன் :** மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முன்னாள் படை வீரர்களுக்கு தமிழக அரசு செய்யும் உதவிகள் யாவை ?

(இ) இவர்களுக்கென தனி உதவி நிதி ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) மேலவை முன் விவர அறிக்கை a ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

(இ) ஆம். மூன்று தனி நிதிகள் உள்ளன. அவையாவன—

(1) தமிழ்நாட்டு முன்னாள் போர் வீரர்கள் உதவி நிதி (Tamil Nadu Ex-Services Personnel Benevolent Fund)

(2) தமிழ்நாட்டில் படை வீரர் போர் பிற்கால சீரமைப்புத்திட்டநிதி (Tamil Nadu Post-War Services Reconstruction Fund)

(3) முன்னாள் போர் வீரர்களின் மறு வாழ்துவுக்கான சிறப்பு நிதி (Special Fund for Reconstruction and Rehabilitation of Ex-Servicemen.)

---

a Printed as Appendix I on Pages 25–28.